சத்திய வேத
# பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.
1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.
Telephone : No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

87-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1962-ம் ஆண்டு சித்திரை மாதம் 29-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை — பிரதிசதம் 12 | 17-ம் இலக்கம்

# 2-வது வத்திக்கான் பொதுச்சங்கத்தில் விவாதிக்கப்படவிருக்கும் திட்டங்கள்

2-வது வத்திக்கான் பொதுச் சங்கத்தின் மத்திய ஆயத்தகுழு இதுவரை நடாத்தியுள்ள 5 கூட்டங்களில் பொதுச்சங்கத்தில் விவாதிக்கப்படுவதற்கென 30 திட்டங்களைப் பரிசீலனை செய்துள்ளது. இத்திட்டங்கள் வெவ்வேறு ஆயத்தக் குழுக்களினுலும் செயலகங்களினுலும் தயாரிக்கப்பட்டவை.

1961-ம் ஆண்டு ஆனியில் நடந்த மத்திய ஆயத்தகுழுவின் முதற் கூட்டத்தில் பொதுச்சங்கத்திற்கு கத்தோலிக்கரல்லாதாரின் பிரதிநிதிகளைப் பார்வையாளராக அழைப்பதுபற்றி மகாமேன்மை. கருதினல் அகுஸ்தீன் பெயா ஆண்டகை ஆயத்தப்படுத்திய திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வேதசாஸ்திரக் குழுவின் சார்பில் மகாமேன். கருதினல் அல்பிறேடோ-ஒட்டாவியானி ஆண்டகை அவர்களால் மத்தியகுழுவிற்குப் பின்வரும் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன. 1. தேவவெளிப்படுத்தலின் மூலநிலையங்கள். 2. விசுவாசத்தை அறிக்கையிடுதற்குரிய பத்திரம். 3. ஒழுக்கமுறை. 4. விசுவாசக் களஞ்சியம்.

குருமாரினதும், இல்லறத்தாரினதும் ஒழுக்கமுறைகளை ஆராயும், ஆயத்தகுழு பொதுக்குழுவுக்கு மேன்மைதங்கிய பியத்திரோ சிரியச்சி ஆண்டகைமூலம் பின்வரும் 9 திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளது. 1. குருமாரின் பிரிவுகள். 2. குருமாரின் பரிசுத்தசிவியம். 3. குருமாரின் உடைகள். 4. விசாரணைப்பங்குகளை ஸ்தாபித்தல், இணைத்தல், பிரித்தல், அவைகளுக்கு குருமாரை நியமித்தல் முதலியன. 5 பங்குக் குருமாரின் கடமைகள்(பொதுப்பட). 6. வருமானமுள்ள பதவிகளும் அவைகளால் உண்டாகும் கடமைகளும். 7. திருச்சபையின் சரித்திர நுண்கலைகள் சம்பந்தமான பிதிர்ரார்ச்சித சொத்துக்கள். 8. பங்குக்குருமாரின் ஆத்தும விசாரணைக் கடமைகள். 9. திருச்சபையின் கற்பனைகள்.

கீழ்த்திசை ரீதிச்சபைகளின் விடயங்கள்பற்றி ஆராயும்குழு மகாமேன். கருதினல் அம்லேற்ரோ சிக்கோஞ்ஞானி ஆண்டகை மூலம் மத்தியகுழுவிற்கு ஆறு திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளது. அவை பின்வருமாறு: 1. தேவதிரவிய அனுமானங்கள். 2. திருச்சடங்குகள். 3. கீழ்த்திசைச்சபைகளின் பிதாப்பிதாக்கள். 4. கிழ்த்திசைக் கத்தோலிக்கர் பிரிவினைச் சபையைச் சேர்ந்தவர்களுடன் தொடர்புகொள்ளல். 5. சுயமொழிகளை உபயோகித்தல். 6. திருச்சபையின் கற்பனைகள்.

மேற்றிராணிமார், மேற்றிராசனங்களின் ஆளுகை, முதலிய விடயங்களை ஆராயும்குழு மகாமேன்மை. கருதினல் போல் மறெல்லா ஆண்டகைமூலம் மத்திய குழுவிற்கு 4 திட்டங்களை இதுவரை சமர்ப்பித்துள்ளது. அவை பின்வருமாறு: 1. மேற்றிராசனங்களைப் பிரித்தல். 2. மேற்றிராணிமாரின் சங்கங்கள். 3. மேற்றிராணிமாருக்கும்உரோமாபுரியிலுள்ள நிர்வாக சங்கங்களுக்கும் உள்ள தொடர்புகள். 4. மேற்றிராணிமாருக்கும் பங்குக் குருமாருக்குமுள்ள தொடர்புகள்.

தேவதிரவிய அனுமானங்களைப் பற்றி ஆராயும் குழு அதன் தலைவராகிய மகாமேன். கருதினல் அலோய்சீ-மசெல்லா ஆண்டகை மூலம் பொதுக்குழுவிற்கு பின்வரும் திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளது. [illegible] 2. பச்சாத்தாபம். 3. குருத்துவம்.

குருமடங்கள், பல்கலைக்கழகங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களை ஆராயும் குழுவின் தலைவரான மகாமேன். கருதினல் யூசெப்பெ-பிற்சார்டோ ஆண்டகை பொது ஆயத்தகுழுவிற்கு மூன்று திட்டங்களைச் சமர்ப்பித்துள்ளார். அவையாவன: 1 குருத்துவ அழைத்தல்கள். 2. குருத்துவ மாணவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி. 3. கத்தோலிக்க பல்கலைக்கழகங்களினதும் குருத்துவ பல்கலைக்கழகங்களினதும் பாடத்திட்ட ஒழுங்கு.

துறவற சபைகளின் விவகாரங்களை ஆராயும்குழு மகாமேன்மை. கருதினல் வலேரியோ-வலேரி ஆண்டகைமூலம் ஒருதிட்டத்தை பொதுக்குழுவிற்குச் சமர்ப்பித்துள்ளது. அத்திட்டம் நான்கு பிரிவுகளைக் கொண்டுள்ளது. 1 துறவற சிவியத்திற்கு அழைத்தல்கள். 2 குருக்களல்லாத துறவிகளின் சபைகளும், உலகொளி ஸ்தாபனங்களும். 3 கிறிஸ்தவ உத்தமதன நிலைகளின் ஐக்கியத்துவம். 4 ஏற்பாட்டொழுங்குகளைப் பிரமாணிக்கமாய் அனுசரித்தல்.

திருவழிபாட்டிற்குரிய விடயங்களை ஆராயும்குழு பொதுக்குழுவுக்கு ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்துள்ளது.

நான்கு ஆயத்தக் குழுக்களும் இரண்டு அலுவலகங்களும், இன்னும் தங்கள் திட்டங்களைச்சமர்ப்பிக்கவில்லை. அவையாவன: 1. வேதபோதக அலுவல் சம்பந்

[தொடர்ச்சி 6-ம் பக்கம்]

## கோறியாவில் மேற்றிராணிமாரின் ஆட்சி முறை

கோறியா முழுவதற்கும் பரிசுத்த பாப்பரசர் மேற்றிராணிமாரின் ஆட்சி முறையை அண்மையில் ஏற்படுத்தியுள்ளார். அப்போஸ்தலிக்க பதிலாளிகளாக இருந்து ஆட்சிபுரிந்த அனைவரும் புதிய மேற்றிராசனங்களுக்கு அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். 12 வருடங்களுக்குமுன் வடகோறியாவில் கொம்யூனிஸ்தரின் ஆட்சியின்கீழ் மர்மமாக மறைந்த **கொங் தக்கேயோக்கா** என்ற மேற்றிராணியார் பியோங்யாங் என்ற மேற்றிராசனத்துக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆனல், அவர் இப்போது எங்கு இருக்கிருரென்பதுபற்றி ஒன்றுமே தெரியாது. புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள மேற்றிராசனங்களைச் சுதேசிகளான நாலு மேற்றிராணிமாரும், அமெரிக்கா தேசத்தைச் சேர்ந்த மூன்று மேற்றிராணிமாரும், அயர்லாந்து, பிரான்சு தேசத்தைச்சேர்ந்த ஒவ்வொருமேற்றிராணிமாரும் ஆண்டுவருகின்றனர்.

## உழைப்பின் உன்னதத்தை உலகுக்குணர்த்திய உத்தமரின் உயர்தினம்




வைகாசி 1-ந் திகதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் —

### வியாக்கியானக் குறிப்புகள்

### அர்ச். கன்னிமரியம்மாளுடைய திருமணம் 1: 26-27

(தொடர்ச்சி)

**29. இதை அவள் கேட்டமாத்திரத்தில்:** கிரேக்க மூலஏட்டில் இந்த வார்த்தைகள், "அவள் அவரைக் கண்டமாத்திரத்தில்" என்று எழுதப் பட்டுள்ளன.

**அவருடைய வார்த்தையினுற் கலங்கி:** அர்ச். கன்னிமரியம்மாளுடைய நிம்மதியற்ற நிலை:

(i) தேவதூதனுடைய தரிசனையினிமித்தம்.

(ii) அவளுடைய வாழ்த்துதலினிமித்தம், ஏனென்றுல் மனத் தாழ்மையினிமித்தம் அதற்குத் தான் பாத்திரமானவள் அல்லள் என்று நினைத்தாள்,

(iii) அந்தத் தரிசனம் பசாசின் தரிசனமென்று பயந்தாள். ஏவாள் சாத்தானுடைய தரிசனத்தினிமித்தம் பயப்படவில்லை. மரியம்மாள், விவேகமுள்ளவளாயிருந்தமையால் கலங்கி, மறுமொழி கொடுக்கிறதற்கு முன்னர் அத்தரிசனத்தைப் பற்றிச் சிந்தித்தாள்.

**30. மரியே! நீர் அஞ்சவேண்டாம்:** அர்ச். கன்னிமரியம்மாளை உறுதிப்படுத்தும்படியாகத் தேவதூதன் அவவுடைய பெயரை உச்சரித்தார்.

**31. இதோ உமது உதரத்தில் கெர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவீர்:** இந்த வசனத்தில் தேவதூதன் தனக்குக் குறிக்கப்பட்ட ஊழியத்தைத் தெளிவாக்குகிருர்.

(i) அர்ச். கன்னிமரியம்மாள் ஒரு குமாரனைப் பெறுவாள்.

(ii) அவருடைய பெயர் வெளியிடப்பட்டது.

(iii) அவருடைய மேன்மைகள் முன்னறிவிக்கப்பட்டது.

**அவருக்கு நாமஞ் சூட்டுவீர்:** இது தீர்க்கதரிசனமல்ல. ஆனுல், தேவ கட்டளை. யேசுநாதருடைய பெயர் தேவமாதாவுக்கும் சூசையப்பருக்கும் வெவ்வேருக முன்னறிவிக்கப் பட்டது.

**யேசு:** இது சாதாரணமான எபிரேய பெயர். யோசுவே (Josue) யோஷுவா (Jeshua) யெகோசுவா (Jehoshuva) ஓசே (Osee) ஓசேயா (Hoshea) ஆகிய மாற்றங்களுடன் பழையேற்பாட்டில்வழங்கப்படுகின்றது. யோசுவே (Josue) யேசுநாதருக்கு முற்குறியாயிருந்தார். ஏனெனில் அவர் இஸ்ராயேல் சனத்தை அவர்களுடைய சத்துராதிகளின் கையிலிருந்து விடுதலையாக்கி, அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு அவர்களைக் கூட்டிக்கொண்டு போனுர்.

**32. அவர் பெரியவராயிருப்பார்:** அர்ச். ஸ்நாபக அருளப்பரைப்போல் "ஆண்டவருடைய சமுகத்தில் பெரியவன்" அல்லர். ஆனுல் பரிபூரணமாகப் பெரியவர்.

**யேசுநாதர்,**

(i) தமது மனித அவதாரத்தினுல் தீர்க்கதரிசியாகவும், குருப்பிரசாதியாகவும், இராசாவாகவும் இருப்பதினுல்,

(ii) தமது பரிசுத்ததனத்தினுல்

(iii) தமது அகில உலக ஆட்சி வல்லபத்தினுல்

(iv) தமது இராச்சியம் முடிவற்றிருத்தலினுல் பெரியவராயிருக்கிருர்.

யேசுநாதருடைய மகத்துவம் உலக அரசருடைய மகத்துவம் போலல்ல. அர்ச். சின்னப்பர் எழுதினதுபோல 1 கொரி. 3: 19—"இவ்வுலகத்தின் ஞானம் சர்வேசுரனுடைய சமுகத்தில் பைத்தியமாயிருக்கின்றது."

**உன்னதமானவருடைய சுதன் என்னப்/டுவார்:** எபிரேய மொழியில், "இவர் உன்னதமானவருடைய சுதன்" என்ற கருத்து—76 வசனத்தில்: "நீயோ! பாலனே!! உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்." "உன்னதமானவர்" என்னும் பட்டம் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி தேவனுக்குக் கொடுக்கப் பட்டது. (சங்கீ. 49: 4; 91: 9)

**அவர் தந்தையாகிய தாவீதின் சிங்காசனத்தை:** இந்த வாக்கிம் அர்ச். கன்னிமரியம்மாள் தாவீதின் கோத்திரத்தைச் சேர்ந்தவள் என்று அத்தாட்சிப்படுத்துகின்றது. யேசுநாதருக்கு மனுஷ தந்தை இல்லாதபடியால் அர்ச். கன்னிமரியம்மாள் யூதாவின் கோத்திரத்துக்குச் சேர்ந்திருக்காவிட்டால், அவர் தாவீதின் சந்திக்குச் சேர்ந்திருக்க முடியாது தாவீதின் சிங்காசனம் என்பது திருச்சபையின் அரசாட்சியாம். யாக்கோப்பு கோத்திரத்தில் என்றென்றைக்கும் அரசாளுவாரென்றதினுல், அப்போஸ்தலர்களும் முந்தின விசுவாசிகளும்மாத்திரம் யாக்கோப்பின் வம்சத்தாரல்ல, ஞானஸ்நானம் பெற்ற சகலரும் விசுவாசத்தினுல் ஆபிரகாம், யாக்கோப்பு என்பவர்களுடைய புத்திரராயிருக்கிருர்கள்.

**அவர் யாக்கோப்பின் கோத்திரத்தில் என்றென்றைக்கும் அரசாளுவார்:** இந்தத் தீர்க்கதரிசனத்தை, பிற்காலத்தில் நடந்தேறிய சம்பவங்களிலிருந்துதான் உணர்ந்துகொள்ளலாம். மெசியா யாக்கோப்பின் பன்னிரண்டு கோத்திரங்களில் மாத்திரமல்ல, மனுக்குலம் முழுவதின் மேலும் அரசாளுவார். அவருடைய இராட்சியத்தில் யூதரும் யூதரல்லாதவரும் சேர்ந்திருப்பார்கள். (ஓசே 1: 11, அருளப்பர் காட்சி 7: 9. "சகல சாதிகளிலும், கோத்திரங்களிலும், தேசத்தாரிலும், பாஷையாளரிலுமிருந்துவந்த........ எவராலும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்ட சனங்களைக் கண்டேன்." இந்தத் தீர்க்கதரிசனம் நடுத்தீர்வைநாளுக்குப் பிறகுதான் நிறைவேறும்.)

**33. அவருடைய ஆட்சிக்கு முடிவு இராது:** மோட்சத்தில் கிறிஸ்துநாதருடைய இராட்சியம் முடிவற்றதாயிருக்கும்.

**34. இது எப்படியாகும்?:** அர்ச். கன்னிமரியம்மாள் நிகழ்ச்சியை

யல்ல, ஆனுல் எந்த வழிவகையினுல் அது நடைபெறுமென்று ஆராய்ந்தாள். அவளுடைய மறுமொழி விசுவாசத்தினுலும் விழிப்பினுலும் ஏவப்பட்டது, சக்கரியாசைப்போல அவள் அடையாளம் கேட்கவில்லை. "இதோ கன்னியானவள் கர்ப்பமாகி மகவைப் பெறுவாள்" என்ற இசையாஸ் தீர்க்கதரிசனத்தை (7: 4) நினைவுகூர்ந்து வாக்களிக்கப்பட்ட மகன் மெசியாஸ் என்று உணர்ந்திருப்பாள், அர்ச். எலிசபேத் கன்னிமரியம்மாளுடைய உறுதியான விசுவாசத்தைப் போற்றுவாள். 45-ம் வசனம்—"விசுவசித்தவளாகிய நீரே பாக்கியவதி."

**நான் புருஷனை அறியேனே:** இந்த வாக்கியத்திலிருந்து திருச்சபைப் பிதாக்கள் அர்ச். கன்னிமரியம்மாள் பூரண கற்பு எண்ணும் நித்திய வாக்குத்தத்தம் செய்திருந்தாள் என்று அனுமானித்திருக்கிருர்கள். இல்லாவிடின் தான் தாயாகப் போகிருள் என்னும் முன் அறிவிப்பை அனுமதிக்கக்கூடாததாயிருந்திருகாது.

# மேற்றிராசனங்கள் தரும் செய்தி

### கல்கமுவா
## கத்தோலிக்க பாடசாலைப் பெற்ருர்நாட் பெருவிழா

குருநாகல் பிரிவைச்சேர்ந்த கல்கமுவா கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலைப் பெற்ருர்நாட் பெருவிழா கடந்த 15-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் தலைமைஆசிரியர் திரு. வீ. எஸ். பிள்ளை அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. பாடசாலைக்கீதமும், தமிழ்மொழி வாழ்த்தும் பாடப்பட்டபின் தலைவர் தம்சொற்பொழிவில்: "சிறப்பான இயற்கைச் சூழ்நிலையில் பிறந்து வளரும் இக்கிராமக் குழந்தைகள் இயல்பூக்கமும், மூளைவிருத்தியும், திடகாத்திரமும் உடையவர்களாய் விளங்குகின்றனர். பரம்பரைத் தமிழ் மரபிலே பிறந்த இக்குழந்தைகளுக்கு பெற்ருர் நன்முன்மாதிரிகை காட்டி, ஊக்கமும் உற்சாகமும் அளித்து அறிவொழுக்கங்களைக் கற்பிக்கத் துணிந்தால் எதிர்காலத்தில் சிறந்ததோர் தமிழ்ச்சமுதாயத்தை உருவாக்கும் சிற்பிகளாக விளங்குவர். நல்லபிரசைகளை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்குமட்டுமே உரியதென்று கருதாமல் பெற்ருேரும் இவ்விஷயத்தில் பெரும் முயற்சியெடுக்க "முன்வரவேண்டுமென்று" கேட்டுக்கொண்டார். அடுத்து கல்கமுவ அரசினர் முஸ்லீம் வித்தியாலய ஆசிரியர் திரு. இராசதுரை அவர்கள், "இளைஞரும், கிராமசேவையும்" என்றவிஷயம் பற்றியும், கொழும்பு விவேகானந்த வித்தியாலய ஆசிரியர் திரு. ஆர். டப்ளிவ் ஏ. லியோண்சியுஸ் அவர்கள், "மாணவர்கடமை" என்பது பற்றியும், இளைஞர் மன்றத் தலைவர் ஆசிரியர் திரு. டப்ளிவ். ஸீ. அலெக்ஷாண்டர் லோவ் அவர்கள், "வாலிபர் தொண்டு" என்பது பற்றியும், மாதர் மன்றத்தின் உபதலைவர் திருமதி அ. லூசியாளு அவர்கள், "மாதர்கடமை" என்பது பற்றியும், மாதர் மன்றச் செயலாளர் திருமதி லூர்தியா அருளப்பு அவர்கள், "தாய்க்குலத்தின் பண்பு" என்பது பற்றியும், மாணவி செல்வி யா. செபமாலை, "கல்வியின் பெருமை" என்பது பற்றியும் இனிய சொற்பொழிவுகளாற்றினர்.

இடையிடையே பாடசாலை மாணவரின் சம்பாஷணைகள், இசை, நடன நிகழ்ச்சிகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் நடைபெற்றபின் "வீரபாண்டிய கட்டப்பொம்மன்", "நோயற்றவாழ்வு" என்ற இனிய தமிழ்நாடகங்கள் நடித்துக்காட்டப்பட்டன, ஈற்றில், மாணவன் அ. செபஸ்தியாம்பிள்ளையின் நன்றியுரையுடனும், தேசிய கீதத்துடனும் பிற்பகல்ஒருமணிக்கு விழாசுபமே முடிவெய்தியது.

### தாண்டவன்வெளிச் செய்தி

## பரிசுத்த வியாகுலமாதா திருநாள்

தாண்டவன்வெளி பரிசுத்த வியாகுலமாதா ஆலயத்தில் தபசுகாலத்தின் 6-ம்வெள்ளியாகிய (13-4-62-ல்) பரிசுத்தவியாகுலமாதா திருநாளை இப்பங்கில் நீடியகாலமாகச் சேவை செய்துவரும் வியாகுலமாதா கிறீஸ்துவதாய்மார் பத்திச்சபையினர் சிறப்பித்தனர்.

திருநாள் அன்று தேவாலயத்தில் அழகுற அலங்கரிக்கப் பட்டிருந்த வியாகுலஅன்னையின் திருச்சுரூபத்தின் முன் இப்பத்திச் சபையினர் அணிவகுத்து இருந்தனர். காலை 6மணிக்கு பங்குவிசாரணைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமி அவர்களால் வியாகுல அன்னைக்கு நன்றியறிந்த தோத்திரப்பாடற்பூசை நிறைவேற்றப் பட்டது.

பூசையில் பத்திச்சபையினர் அனைவரும் திவ்வியநற்கருணைபெற்று வியாகுல அன்னைக்கு தங்களைமுழுதும் ஒப்புக்கொடுத்தனர்.

பூசையின்பின் மேற்படி சபையினரின் கூட்டம் கட்டளைக்குரவர் தலைமையில் நடைபெற்றது. கூட்டவேளையில் அவர் வியாகுலஅன்னையின் வியாகுலங்களைவிளக்கிச் சிறந்த ஓர்உரை நிகழ்த்தினுர்.

அன்றுமாலை 5மணியளவில் வியாகுல பிரசங்கம் கோயிலில் வாசிக்கப்பட்டு, தொடர்ந்துசெய்த சிலுவைப் பாதையுடன் திருநாள் முடிவாயது.

—நிருபர்.

## கத்தோலிக்க தொழிலரளர் திருநாள்

### வைகாசி 1-ந் திகதி

தொழிலாளரின் பாதுகாவலரான
அர்ச். சூசையப்பரின்
திருச்சுரூப சுற்றுப்பிரகாரம்

**சுற்றுப்பிரகாரப் பாதை:**

சுற்றுப்பிரகாரம் பாஷையூர் அர்ச். அந்தோனியார் கோவிலிலிருந்து ஆரம்பமாகி, புங்கங்குளம் வீதி—ஈச்சமோட்டை வீதி—பழைய பூங்கா வீதி—மூளாய் வீதி—அச்சக வீதி—பிரதானவீதி—கண்டி வீதி—ஆஸ்பத்திரி வீதி—நாலாம் குறுக்கு வீதி வழியாகத் திருச்சுரூபம் கடலணை மைதானத்தை வந்தடைந்து திவ்விய சற்பிரசாத ஆசிர்வாதத்துடன் முடிவுபெறும்.

**குறிப்பு:—**
பாதை ஓரங்கள் மாத்திரம் சோடிக்கப் படவேண்டும்.

**நிகழ்ச்சிகள்**

காலை 7 மணிக்குத் திவ்வியபூசை (ஆசனக்கோவிலில்)
9-30—10-00 மணிவரை சல்லாபம்.
10-30—11-30 வரை திருமணித்தியாலம்
2-30—3-00 வரை செபமாலை
4-00 மணிக்குச் சுற்றுப்பிரகாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### சித்திரை மாதம் — 1962

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29 | ஞா. | 1 | தவளோற்சவ ஞாயிறு | (வி. ம.) | வெ |
| 30 | தி. | | அர்ச். சியன்ன கத்தரீனம்மாள் | | வெ |

### வைகாசி மாதம் — 1962

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | செ. | | தொழிலாளரின் பாதுகாவலரான அர்ச். சூசையப்பர் | (வி. ம.) | வெ |
| 2 | பு. | | அர்ச் அத்தனாசியார் | | வெ |
| 3 | வி. | ம | காலதினம் (அர்ச். அலெக்சான்டர், தோழர் ஞா.) | | வெ |
| 4 | வெ. | யே | அர்ச். மொணிக்கம்மாள் | | வெ |
| 5 | ச. | மா | அர்ச். 5-ம் பத்திநாதர் | | வெ |

### அடையாளங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| † | கடன் திருநாள் | மா. | மாசற்ற இருதயமாதாவின் பூசையைத் தெரியலாம் |
| 1 | 1-ம் வகுப்புத் திருநாள் | ம. | மரித்தோர் பூசையைத் தெரியலாம் |
| 2 | 2-ம் வகுப்புத் திருநாள் | (வி. ம.) | பூசையில் விசுவாசமந்திரம் |
| யே. | யேசுவின் திரு இருதயப் பூசையைத் தெரியலாம் | ஒ. | ஒருசந்தி நாள் |

சத்திய வேத
பாதுகாவலன்

1962-ம் ஆண்டு
சித்திரை மாதம் 29-ந் திகதி

# மே தினம்

1955-ம்ஆண்டு மேமாதம் முதல் நாளன்று தொழிலாளர்களையே பெரும்பான்மையினராகக் கொண்டிருந்த மூன்று இலட்சம்மக்கள் வத்திக்கானிலே பாப்பரசரது மாளிகைமுன்பாக மாபெருஞ்சனசமுத்திரம்போலக் குழுமியிருந்த மகாசுபசந்தர்ப்பத்திலே மேதினமானது தொழிலாளியான அர்ச். சூசையப்பர்தினமென்று பரமபதமடைந்த 12-ம்பத்திநாதபாப்பானவராலே பிரகடனஞ்செய்யப் படலாயிற்று. அதுமுதல் ஆண்டுதோறும் மேதினம் தொழிலாளியான அர்ச். சூசையப்பரின் தினமாக—பெருந் திருநாளாகக் கத்தோலிக்க உலகமுழுவதும் பெரிதும் அட்டோலிக்கமாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. அர்ச். சூசையப்பர் ஒரு தொழிலாளர். இதனைஎவருமே ஆட்சேபித்திலர். நெற்றிவியர்வை நிலத்திற்சிந்த அன்றூடன்று அரும்பிரயாசப்பட்டுத் தச்சுவேலைசெய்து தம்முடைய திருப்பத்தினியையும், தேவசுதனாகிய திவ்விய யேசுவையும் அவர்பராமரித்துவந்தார். தொழில்செய்வது—தச்சுத்தொழில் செய்வது எப்படியென்று கைத்தாதையாயிருந்து திவ்வியயேசுவுக்குக் கற்றுக்கொடுத்தவர் இவரே. இதிலிருந்து அவர் தச்சனின்மகனென்று அறியப்பட ஏதுவாயிருந்தவர் இவரே. ஆம், திருக்குடும்பத்தைக் காப்பாற்றுவதான பெரும்பொறுப்புவாய்ந்த பணியை மேற்கொண்ட அர்ச். சூசையப்பர் அதிகம்கஷ்டப்பட்டுத் தமது தொழிலை அயராதுபிரமாணிக்கமாகச் செய்துவந்தார். அதனால் அவரது வாழ்க்கை உலகில் கஷ்டப்பட்டுழைக்கும் தொழிலாளர்மத்தியிலே இன்று ஒருமறுமலர்ச்சியை—புத்துணர்ச்சியைப் பிறப்பித்திருப்பதிலிருந்து அவர் திருநாள் தொழிலினதும், தொழிலாளரினதும் மகத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

மேதினம் தங்கள்சொந்தத்தினமென்று மாக்ஸியர்கள் ஆர்ப்பாட்டஞ் செய்வார்கள். ஆனால், அது மாக்ஸியர்கள் தினமன்று. நியூயோக்நகரிலே தச்சுத்தொழில்செய்து வாழ்ந்திருந்த பீற்றர் மகியரென்ற கத்தோலிக்கர் ஒருவர் 1882-ம்ஆண்டு அடியிட்ட தொழில்இயக்கமே எட்டுவருடங்களின்பின் மேதினமாகஉருவாகியது. ஆனால், கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழியேபோன்று 1917-ம் ஆண்டின் கம்யூனிஸ்த புரட்சிக்குப்பின் இடதுசாரிகளான இந்தமாக்ஸியர்கள் மேதினத்தைத் தொழிலாளர்தினமென்று குரவையிட்டுக் கும்மாளமடிக்கத்தொடங்கித் தொழிலாளர் பெயராலும், அவர்களின்உதவியாலும் அதிகாரத்தைக் கைப்பற்றிச் சர்வாதிகாரிகளானபின் தொழிலாளர்களின் நலனை அவர்கள் கருதுவதுமில்லை. வேலைநிறுத்தஉரிமையைத் தொழிலாளர்களுக்கு அருளுவதுமில்லை. தொழிற்சங்கங்களும் சம்பளஉயர்ச்சியைப் பற்றியோ, தங்களுக்குண்டாகும் கஷ்டநஷ்டங்களைப்பற்றியோ எடுத்துக்கூறவும், நீதிவழங்கும்படியாய்த் தலைநிமிர்ந்துகேட்கவும் இடமில்லை. அரசாங்கம் நிர்ணயித்த வேலைநேரம், இடம், ஊதிபம் ஆதியவற்றுடன் தொழிலாளர் திருப்தியடைந்திருக்க வேண்டியதே. மக்களின் சாதாரண சுதந்தரங்களாகிய அரசியல், சமயம், கல்வி, கலாசாரம்போன்ற உரிமைகளை அரசாங்கம் மதிப்பதில்லை. கம்யூனிஸ்த ஆட்சி நடந்தேறும் நாடுகளிலே இவைகளெல்லாம் சாதாரணமாக அறியப்பட்டவைகளே. அம்மட்டா! மாக்ஸியர்களின் மேதின ஊர்வலங்களும், மாநாடுகளும் லோகாயதத்தையே குறிக்கோளாகக்கொண்டு பெரும்அட்டகாசங்களோடும், கண்டனங்களோடும் நிகழ்ந்து நாட்டிலும், தொழிலாளர் மத்தியிலும் அமைதியைக்குலைத்துப் பலவிதசங்கடங்களுக்கும் அடிகோலிவருவதைப் பலகாலும் நாம் அவதானித்திருக்கிறோம்.

முன்போலக் கத்தோலிக்கதொழிலாளர் உறவுச்சமாசத்தின் ஆதரவிலே இம்முறையும் யாழ்ப்பாணக் கத்தோலிக்க தொழிலாளரும், அன்னைச்சார்ந்தவர்களும் மேதினத்தைப் பக்திச்சிறப்பாய்க் கொண்டாடுதற்கான ஆயத்தமெல்லாம் செய்துவருவதானது, கத்தோலிக்க தொழிலாளரிடையே மாத்திரமல்ல, மற்றேனையவர்கள்மத்தியிலும் அரிதானஉணர்ச்சிகளைப் பிறப்பிப்பதாகும். மனிதாவதாரஞ்செய்த தமதுதிருமகனாகிய கடவுளையே தம்முடையமுகக்கண் முன்பாகவைத்துத் தொழில்நடத்திய தொழிலாளியான அர்ச். சூசையப்பரின்வாழ்க்கை எத்துணைபெரும்மாட்சியாய், மகத்துவமுள்ளதாய் இருந்திருக்கும்! தொழிலாளராகிய தங்களுக்கெல்லாம் வல்லபமிக்க ஒருநல்ல பாதுகாவலரும், நன்மாதிரிகையானவரும், தங்களதுகஷ்டநஷ்டங்களைத் தமதுவாழ்க்கையிலே நன்கறிந்தவருமான பெரியதொழிலாளிஒருவர் இருக்கிறார்; ஆகவே, அவரதுமாதிரிகையைக் கண்டுபாவிக்கவேண்டுமென்ற புனிதஉணர்ச்சியைத் தொழிலாளரிடையே உண்டுபண்ணிவிடுமாறு தொழிலாளியான அவர்திருநாளை மேதினமன்று ஆனந்தமாகக்கொண்டாடுவோம். அன்றுசாயந்தரம் அத்திருமாதவனார் நகர்வீதிகளில் ஓட்டோலகமாய் எழுந்தருளிப் பெரும் ஊர்வலமாய், கோலாகலமாய் வரும்போது அவரைப் பாவாலும், நாவாலும் புகழ்ந்துபாடித் தோத்திரித்துத் தொழிலினதும், தொழிலாளரினதும் மகத்துவத்தை [illegible] வோம்.

## தமிழ்த்தொண்டு இதழ்

மொழிபெயர்ப்பு விமர்சனக் கட்டுரை — இல 3.

# இலக்கண அமைதி மீறித் தமிழ் மரபும் சிதைக்கப்படும் பணி

## அரசகரும மொழித்திணைக்கள வெளியீடு காட்டுவது

[வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம், B. A.]

முன் இரு கட்டுரைகளில் அரசகரும மொழித்திணைக்கள வெளியீடு ஒன்றில் காணப்பட்ட திசைச்சொல், கலைச்சொல் ஆகியவற்றின் பொருந்தாமையைக் காட்டினேம். இங்கு சில இலக்கண வழுக்களையும், மரபு வழுக்களையும் காட்டி இக்கட்டுரையை முடிப்போம்.

முதலில் கீழே தரப்பட்டுள்ள சில வாக்கியங்களை அவதானிப்போம்:

(அ) புரட்சியினால் ஏற்பட்ட பெரும் விளைவு யாதெனில் இனிமேல் அரசன் தன்வருவாயிற் பெரும் பாகத்தைப் பாராளுமன்றத்தினின்றும் ஆண்டுக்கொடைகள் மூலம் பெறவேண்டும் என்பதே.

(ஆ) இவற்றிலொன்று உவில்லியம், மேரி, ஆகியோரின் ஆட்சியின் ஆரம்பத்திலும் மற்றையது உவில்லியத்தின் ஆட்சியின் முடிவிலும் ஏற்படுத்தப்பட்டன.

(இ) இளவரசி ஆனின் குழந்தைகள் எல்லாம் இறந்துவிட்டதாலும்,

(ஈ) இதுமுதல் நீதிபதிகள் சட்டமன்றங்களிற் குற்றவாளியாக்கப்பட்ட பின்பே, பதவியினின்று நீக்கப்படக்கூடும்.

(உ) பதினெட்டாம் நூற்றூண்டில், அனோவர் வமிசம் அரசகட்டிலேறிய பின்னர், இணங்காதோர் பதவிவகித்ததினால் ஏற்பட்ட தண்டனைகளை மன்னிக்கும் ஒருசட்டம் ஆண்டுதோறும் இயற்றப்பட்டது.

இவ்வாக்கியங்களில் சில வாக்கிய அமைப்பிலும், சில வாக்கியச் செறிவிலும் வழுக்கள்உடையனவாய் இருக்கின்றன. மேலேதரப்பட்டுள்ள வாக்கியங்களில் அ, உ, வாக்கியங்கள் இலக்கணப்பிழையற்றன. ஆனால் அவை கம்பீரமற்றவை; வாக்கியக் கட்டுத் தளர்ந்து காணப்படுகிறது. உ, வாக்கியம் தெளிவற்றதாயிருக்கிறது. இவ்வாக்கியங்களைச் சிறிது மாற்றியமைத்து வாசிப்போம்.

(1) அரசன் தன் வருமானத்திற் பெருமளவை இனிப் பாராளுமன்றத்தினின்றும் ஆண்டுநன்கொடைகள் மூலம் பெறவேண்டும், என்பதே புரட்சியினால் ஏற்பட்ட பெருவிளைவு ஆகும்.

(2) இவண், பொதுவணக்க நூல் வாசகங்கட்கு இணங்கமறுத்தவர்கள் அரசாங்க அலுவலராயிருப்பதால் அவர்கட்கு ஏற்பட்ட தண்டனைகளை மன்னிக்கும் ஒருசட்டம், 18 ஆம் நூற்றூண்டில் அனோவர் வழியினர் அரசகட்டிலேறியது முதல் ஆண்டுதோறும் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாக்கியங்கள் தெளிவாகவும், இறுக்கமாகவும் இருக்கின்றன என்பது கண்கூடு.

மேலே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் ஆ, இ, ஈ என்பன இலக்கண வழுக்கள் அமைந்தன. மொழியின் உயிரையே கொலைசெய்கின்றன. ஆ வாக்கியத்தின் பயனிலை— ஏற்படுத்தப்பட்டன. இதற்குரிய எழுவாய் வாக்கியத்தில் இல்லை.

இவ்வாக்கியத்தை மேல்வருமாறு அமைக்கலாம்: இவற்றிலொன்று வில்லியம், மேரி ஆகியோரின் ஆட்சியின் ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்டது; மற்றையது வில்லியத்தின் ஆட்சியின் முடிவில் ஏற்படுத்தப்பட்டது. அல்லாவிட்டால், "வில்லியம், மேரி என்பவர்களின் ஆட்சித் தொடக்கத்தில் இவற்றிலொன்றும், வில்லியத்தின் ஆட்சி இறுதியில் மற்றையதும் ஏற்படுத்தப்பட்டன" என்றும் எழுதியிருக்கலாம்.

(இ) வாக்கியத்தைக் கவனிப்போம். இது ஒருதொடர்வாக்கியத்தின் பகுதி; ஆனால் ஒரு தனிவாக்கியம். குழந்தைகள் எல்லாம் இறந்துவிட்டது. மூன்றும் வகுப்பில் படிக்கும் குழந்தைகள் கூட இப்படியான பிழைவிடமாட்டார்கள். எவரும் அறிந்திருக்கவேண்டிய ஆரம்ப இலக்கண விதி, பட்டதாரி மொழிபெயர்ப்பாளருக்கோ, அத்திணைக்களத்தில் பெரும்பதவி வகிக்கும் அறிஞர்களுக்கோ தெரியவில்லை! (ஈ) வாக்கியமும் அத்தகையதே. நீதிபதிகள் குற்றவாளி—உள்ளங்கை நெல்லிக்கனிபோல் பிழை காணப்படுகிறது. எழுவாயுடன் பயனிலை இசைந்துநிற்க வேண்டுமென்ற சாதாரண விதியை அறியாதார் அறியாதாரே. இவை குறிப்பிட்ட பிரித்தானியாவில் புதிய அடிப்படை வரலாற்று நூலில் முதல் சில பக்கங்களிலே காணப்பட்ட வழுக்களாகும்.

வல்லினம் மிகுதல் அல்லது வல்லினம் மிகாமை என்னும் இலக்கண விதிகளை இம்மொழி பெயர்ப்பாளர் எவ்வளவில் தெரிந்து இருக்கிறார்கள் எனக் காண்போம். தற்காலம் "வாழை பழம், கீரை கறி என்று வல்லினம் மிக வேண்டிய இடங்களில் மிகச்செய்யாமலும், பிரசித்திப்பெற்ற, பள்ளிச் சென்றான்" என்று வேண்டாத இடங்களில் காது கசக்கும்படி வல்லினம் மிகவும் செய்து விடுகிறார்கள். அரசகரும மொழித்திணைக்களத்தார்க்கும் இவை தெரியவே தெரியா.

ஆக என்ற வினையெச்சம் நிலைமொழியாகவும் வருமொழி முதலெழுத்து வல்லினமாகவும் வந்தால் வல்லினம் மிக வேண்டுமென்பதை இவர்கள் அறிந்திலர். வல்லெழுத்து மிக வேண்டிய இடத்தில் காற்புள்ளியிட்டு ஏமாற்றப் பார்க்கின்றனர்.

இங்கிலிசு பிரசை எனக் காணப்படுகிறது. இங்கும் வல்லினம் மிகுந்திருத்தல் வேண்டும். "எடுக்கப்பட்டு புதிய நாணயங்கள் வழங்கப்பட்டன". வன்றொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம்வந்தால் வல்லினம் மிகும் அன்றோ.

தமிழ் மரபு முறைகள் எவ்வளவில் புறக்கணிக்கப்பட்டுள்ளன என்பதையும் சிறிது பார்ப்போம். முதலில் மேல்வரும்வாக்கியங்களையோ, சொற்றொடர்களையோ கவனியுங்கள்.

(அ) இருசபைகளுக்குமிடையிலிருந்த தொடர்பு மாற்றமடைந்தது.

(ஆ) உவில்லியத்தின் கீழ் பதவியேற்றல்,

(இ) இரண்டு போர்களையும் எடுத்துக்கொள்வோம்.


இங்குத் தரப்பட்ட மூன்று வாக்கியப் பகுதிகளும் ஆங்கில மரபு முறையான வாக்கியங்களாகும். Between என்ற ஆங்கிலச்சொல்லை "இடையில்" என மொழிபெயர்க்கிறேம். ஆனால், எப்பொழுதும் அச்சொல் தமிழில் அப்பொருளைத் தாராது. இருசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்கும்இடையிலிருந்த தொடர்புஎனத் தமிழிற் சொன்னால், அத்தொடர்பு ஒரு கட்டடமாகவோ, ஒரு பாதை யாகவோ இருக்கலாம். ஆத்மீகத் தொடர்பைக் குறியாது. எனவே, இவ் வாக்கியத்தை இரு சபைகளினதும் உறவு மாற்றமடைந்தது, என எழுது வதே தமிழ் மரபாகும். "கீழ் பதவி யேற்றல்" என்பதும் take office under என்னும் ஆங்கில மரபு வாக்கிய மாகும். கீழ் என்னும் ஏழாம் வேற் றுமை உருபு, மரத்தின் கீழ்ப் படுத் திருந்தான், நிலத்தின் கீழ் இரத்தினம் உண்டு, முதலிய காட்டுகளிற் காணப் படும் பொருளையன்றி, ஒருவனின் அதிகாரத்துக்கு உட்பட்ட செயலைக் குறிக்கவராது. ஆங்கிலத்தில் under என்னும் சொல் பரந்த கருத்தைத் தரக்கூடியது. எனவே, வில்லியத்திடம் பதவியேற்றல், என்பதுதான் சரியான தமிழ் மரபாகும். "எடுத்துக்கொள் வோம்"—இது இன்னொரு ஆங்கில மரபு ஆகும். போர்களை எப்படி எடுக்க முடியும்? we will take up the two wars.

என்னும் ஆங்கிலமரபு வாக்கியத்தை இவ்வாறு அனேகர் மொழிபெயர்க் கிறார்கள். இரண்டு போர்களையும் கவ னிப்போம், ஆராய்வோம் என்பன போன்ற தகுதியானவினைகளைச் சேர்த்து முடிக்கவேண்டும். நூலில் இச் சொல் காணப்படும் வாக்கியத்தைப் பின்வருமாறு அமைக்கலாம். "1688 முதல் 1713 வரையுள்ள காலத்தில் இரண்டுபோர்கள் நிகழ்ந்தன; முதலில் அவற்றைக் கவனிப்போம்."

இதுவரை, தமிழுக்குத் தொண்டு செய்யக் கடமைபூண்ட ஓர் அலுவ லகத்தினர் தமிழை எப்படி வளர்க் கின்றனர் என்பதை அவர்கள் வெளி யிட்ட நூலில் முதல் ஐந்து பக்கங்களி லிருந்தே காட்டினோம். மாணவர் களின் கட்டுரைகளைப் போலப் பிழை கள் மலிந்த இவ்வெளியீட்டினால் பயன் எய்துபவர் மொழிபெயர்ப்பாளர்களே யன்றி வேறெவரும் அல்லர். ஒரு நூலின் தகுதி, அதன் அளவிலாவது, மொழிபெயர்ப்பாளர்களின் பட்டங்களி லாவது தங்கியிருக்கவில்லை. நூலின் தகுதி பிறரின் பாராட்டிலாவது, கண் டனங்களிலாவது தங்கியிருக்கவில்லை. தகுதியும் பெருமையும் உண்மையைப் பொறுத்தே ஏற்படுகின்றன. பூனை கண்ணை மூடிக்கொண்டு, தனக்கு மட் டும் தென்படுகின்ற இருளால் உலகெங் கும் இருண்டுவிட்டதாக நினைக்கிற தாம். இதுபோலவே அரசகரும மொழித் திணைக்களத்தின் தமிழ்ப் பகுதியார் நினைக்கின்றனர்போலும். இப்பகுதியார் தம் எசமானர்களாகிய சிங்கள அதிகாரிகளோடுகூடித் தமிழை அழிக்கச் சூழ்ச்சி செய்திருக்கிறார் களோ? நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்ததுபோல இவர்களிடம் மொழிப் பாதுகாப்பு ஒப்படைக்கப்பட் டுள்ளது. மொழியின் தூய்மையைக் கெடுத்துக் கறைப்படுத்தும் பணியை இவர்கள் செய்யாமல் விடுவார்களாக.



திரு. ஜி. யோசவ் பொன்ராசா
அவர்களின்

## அமரதின நினைவு

### 5-ம் ஆண்டு

தோற்றம்: 4—5—1921
மறைவு: 4—5—1957

4-5-62 வெள்ளிக்கிழமை காலை 5-30 மணிக்கு அவரின் ஆன்ம சாந்திக்காக சஞ்சுவாம் கோவிலில் ஒரு துக்கப்பூசை நடந்தேறும்.

**செபம்**

சர்வலோக கர்த்தாவும், பூலோக மீட்பருமாகிய திவ்விய யேசுவே! தேவரீர் மானிடரை இரட்சிக்க மனிதனாக அவதரித்துப் பூங்காவனத்திலே சர்வாங்கமாய் இரத்த வெயர்வை வெயர்த்து மகா சோபசந்தாபம் அனுபவித்துக் கல்வாரியில் சிந்தின திரு இரத்தத்தின் பேறு பலன்களைப் பார்த்து யோசவ் பொன்ராசாவின் ஆத்துமத்திற்கு முடிவில்லாத காலத்தின் பேரின்ப சுகத்தைக் கட்டளையிட்டருளும்; நித்தியகாலத்தின் பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக் கடவது, ஆமென்.

ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும்
மனைவி:
திருமதி ஜே. யெஸ்சி மேரி யோசவ்வின்
மக்கள்:
ஜே. ஆன் கத்தறின் ஐடா,
ஜே. அன்ரன் புஷ்பராசா,
ஜே. மேரி கிஸ்டா,
ஜே. பிரான்சிஸ் வலன்ரைன் றபின்றராசா,
ஜே. பிரான்சிஸ்கா யெனற் லின்டா.

4, மருதடி வீதி, றக்காறோட்.

## செப அப்போஸ்தலசபை வெளியீடு

### வைகாசி மாதம்

**பொதுக்கருத்து:** கத்தோலிக்கருக்கும், பிரிந்திருக்கும் கிறீஸ்தவர்களுக்குமிடையே அதிகமான மதிப்பும், இன்னும் நுணுக்கமான விசாரணைகளும் உண்மை ஒற்றுமைக்காகிய வழியை ஆயத்தம்பண்ணத் தக்கதாய் வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** திவ்விய நற்கருணைமேல் நமக்கிருக்கும் ஆழமான பக்தியானது மிஷன் நாடுகளிலே குருத்துவ, சந்நியாச அழைத்தல்களை அதிகரிக்கச்செய்யுமாறு மன்றாடிக்கொள்வது.

* * *

**காலைக்காணிக்கைச் செபம்**

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென்று நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

### நன்றித் துதி

யேசுவின் திருஇருதய இரக்கத்தினாலும், சதாசகாயமாதா அர்ச். அந்தோனியார், அர்ச். யூதா ததேயு, அர்ச். செபஸ்தியார் இவர்கள் மன்றாட்டாலும் என்காலில்வந்த வருத்தம் சத்திரசிகிச்சையின்மூலம் குணமடைந்ததற்காக நேர்த்தியின்படி பத்திரிகையில் பிரசுரம்பண்ணுகிறேன். காலதாமதமானதற்காக மன்னிப்பு கோருகிறேன் இன்னும் என் ஏழைக் குடும்பத்தின் சகல கஷ்டங்களையும் நீக்கும்படி மாதாவைக் கெஞ்சி மன்றாடுகிறேன்.

ஓர் அடியாள்.

# கிறிஸ்துவின் உத்தானம்

பூவுலக மக்களவர் இறைவனையே மதியாமல் வாழ்ந்த தாலே
தேவுலக நெறிவிலகித் திசைதெரியா மரக்கலமே போல்வ தானார்
யாவருமே வழிபிசகி அலகைவழி நிற்பதைநம் சேயோன் கண்டு
பூவுலகி லெய்தியொரு மனுமகனாய்த் தாமுதிக்கக் கருணை கூர்ந்தார்

பாராத அந்தகர்கள் பாருலகக் காட்சிகளைப் பார்க்கப் பண்ணி
சீரான கேள்விதனைச் செவிடருக்குக் கொடுத்தவரைக் கேட்கச் செய்து
தீராத நோய்பிணிகள் தீர்த்தருளி ஊமையரைப் பேசப் பண்ணி
நேராக மாண்டவரை நிலவுலகில் உயிருடனே வாழ வைத்தார்

இத்தனையுஞ் செய்தவரே இறைமகனென் றனைவருக்கும் விளங்கப் பண்ணி
உத்தமராய் ஈராறு சீடரிலே பேதுருவைத் தலைவ னாக்கி
பத்திநெறிப் போதனைகள் பலபுரியப் பாரிலவர்க் குரிமை நல்கி
முத்திவழி திறந்திடவே முதல்வனுக்குப் பரிகாரம் பண்ண லானார்

பூங்காவில் உடலமெலாம் குருதிசுரந் தொழுகிட நல் லவத்தை யுற்று
தாங்காமல் எந்தையரே இதனையகற் றிடுமினென இறைஞ்சி நின்றும்
ஓங்கியநற் கோபமுடன் கற்றூணில் அடிபட்டார் எதிரா னோரால்
தூங்கியுயிர் விட்டனர்காண் சிலுவைதனில் மூன்றுமணி அவத்தை யுற்றே

அட்சயமே லகுசூட்சம் பிரகாச மெனுவரங்கள் நான்கும் பெற்று
கிட்டரிய தேகமொடு கல்லறையி னின்றமரர் ஏத்திப் போற்ற
மட்டற்ற மாண்புநிறை இறைமகனே தாமென்று எழுந்து நின்றே
இட்டமுடன் அன்னையர்க்கும் மற்றுமுள சீடருக்கும் காட்சி தந்தார்

ஞா. ஆனந்தராசா.

# கண்டி மேற்றிராசன சமாகமம்

## 1962-ம் ஆண்டு சித்திரை மாதம் 29-ம் திகதி

### நுவரேலியாவில் நடைபெறும்.

—::—

**அட்டவணை.**

| | |
|---|---|
| காலை 8 மணி | திவ்விய பூசை மகா வந். கண்டி மேற்றிராணியாரால் ஒப்புக் கொடுக்கப்படும். |
| | கூட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு நுவரேலியா கத்தோலிக்க சங்கத்தவர்களால் நல்ல இளைப்பாற்றி மடத்துப்பாடசாலையில் தேனீர் விருந்து அளிக்கப்படும். |
| காலை 10 மணி | அர்ச். சவேரியார் கல்லூரி மண்டபத்தில் கலந்துரையாடல். |
| | விடயம்: திருச்சபையில் இல்லறவாசிகளின் பங்கு. பிரதான பேச்சாளர்: இலங்கைச் சர்வ கலாசாலை திரு. ஹிலரி குறூஸ். |
| மாலை 1 மணி | மத்திய போசனம் இளைப்பாற்றி மடத்துப் பாடசாலையில். |
| மாலை 2 மணி | இறுதிக் கூட்டம் அர்ச் சவேரியார் கல்லூரி மண்டபம். |
| மாலை 3 மணி | தேனீர் விருந்து இளைப்பாற்றி மடத்துப் பாடசாலையில். |
| மாலை 4-30 மணி | திவ்விய சற்பிரசாத சுற்றுப்பிரகாரமும் தேவநற்கருணை ஆசீர்வாதமும். |

நீர்கொழும்பு

## கத்தோலிக்க பத்திரிகைகள் வினியோகிப்போரின்

### பாஸ்கா வருடாந்தப் பரிசுகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1-ம் பரிசு | ரூபா | 50. | அங்கத்துவ இல. | 176 வீ. ஜே. தல்பதாது, வதுளை |
| 2-ம் | ,, | 25. | ,, | S. 490 நெடுந்தெரு, நீர்கொழும்பு |
| 3-ம் | ,, | 10. | ,, | M. 570 கட்டுவப்பிட்டிய, ,, |
| 4-ம் | ,, | 5. | ,, | V. 1060 மங்குளிய ,, |

வந்தனைக்குரிய எமிலியானுஸ்பிள்ளை யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டவரவர்களின் (13 × 9) பிரதிமைப்படங்கள் பெறுபவர் பின்வருமாறு:—

880 — 361 — 600 — 776 — 41 — 1133 — 1175 — 1192 — 81
92 — 64 — 71 — 1194 — 6 — 1208 — 26 — 1030 — 7 — 1199
87 — 980 — 350 — 1038 — 266 — 238

அங்கத்துவ இலக்கமுடைய கைப்புத்தகத்தைக் காண்பித்து பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

எமது காரியாலயத்திலிருந்து அல்லது ஏசண்டுகளிடமிருந்து சிங்கள, தமிழ், ஆங்கில பத்திரிகைகளையும்; (இந்தியா) கத்தோலிக்க சேவை பத்திரிகையையும் விலைக்கு வாங்கும் சகலருக்கும் சங்க அங்கத்துவ உரிமை உண்டு என்பதைக் கவனிக்குக.

சத்தியவேத பாதுகாவலன் நேரில் வாங்குவதாயின் பிரதி 12 சதம்.
கத்தோலிக்கசேவை (இந்தியா) ,, ,, ,, 20 சதம்.
,, ,, தபாலில் ,, ,, 23 சதம்.

மனேஜர்
கத்தோலிக்க பத்திரிகை வினியோகஸ்தர்
22, கனல் றோட்,
நீர்கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## குருமார் ஞானவொடுக்கம்

அமலோற்பவ மரியநாயகி சபையைச்சேர்ந்த வண. குருப்பிரசாதிகளின் வருடாந்த முதலாவதுபிரிவான ஞானவொடுக்கம் கண்டி, அம்பிற்றியா குருமடத்திலே நிகழும்சித்திரைமாதம் 29-ந்திகதிஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி அடுத்தவைகாசிமாதம் 5-ந்திகதி சனிக்கிழமை முடிவாகும். இரண்டாவதுபிரிவான ஞானவொடுக்கம் வைகாசிமாதம் 6-ந்திகதிஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி அடுத்த12-ந்திகதி சனிக்கிழமை முடிவாகும்.

## எதிர்பார்த்தவருமானம் இல்லை

கடந்தநிதிவருடத்தில் காணிவரி, வியாபாரவரி, பதிவுவரி, பங்குவரி, சிறப்புத்தொழில்வரி, விசாவரிஆதியன மூலம் 9கோடியே 30இலட்சம்ரூபா வருமானம்கிடைக்குமென்று அரசாங்கம் மதிப்பிட்டிருந்தது. ஆனால், இவற்றின்மூலம் கிடைத்தவருமானம் 1கோடியே71இலட்சம்ரூபாமட்டுமே.

## கட்சியிலிருந்து விலகினர்

அரசாங்கம் எடுத்துக்கொண்ட பாடசாலைகளிலே கடமையாற்றிவந்த பதினறுதமிழாசிரியர்கள் இதுவரை தாங்கள்சேர்ந்திருந்த தமிழரசுக்கட்சியிலிருந்து விலகியுள்ளார்கள். அதனல் இவர்களிடமாகக் கட்சிச்செயற்குழுவின் அடுத்தகூட்டத்திலே இந்தப் பதினறுகாலிஸ்தானங்களும் நிரப்பப்படவிருக்கின்றன.

## ஆவசியக ஆசிரிய நியமனங்கள்

ஆசிரியத்தொழிலுக்கு மனுப்பண்ணிவிட்டு நாளெண்ணிக் கொண்டிருக்கும் ஆசிரியர்களில் 2,000பேர் பட்டதாரிகளாவர். நியமனத்துக்குக் காலவரையறைகொடாது காத்துக்கொண்டிருக்குமாறு கல்விப்பகுதி இவர்களுக்குத் தெரிவித்திருக்கிறது. தங்கள்பாடசாலைகளின் ஆசிரியபதவிகளிலே இருந்துவரும் காலிஸ்தானங்கள் உடனடியாகத்தானே நிரப்பப்படவேண்டுமென்று சிலபாடசாலைகளின் தலைவர்கள் கல்விப்பகுதிக்கு மனுச்செய்து, அங்ஙனம் நிரப்பாதிருந்தால் அவற்றிலே மாணவர்களின் கல்விக்குப் பங்கம்ஏற்படுமெனத் தெரிவித்திருக்கிறார்கள். கல்விப்பகுதி சேகரித்துள்ள புள்ளிவிபரப்படி, சுமார்2,000ஆசிரிய நியமனங்கள் உடனடியாகத்தானே செய்யப்பட வேண்டியனவாகும்.

## அரசாங்கமும் சமயகல்வியும்

“அரசியல்வாதிகள் பாடசாலைவைபவங்களில் கலந்துகொள்ளாது அகற்றிவிடப்படவேண்டும்; புதியஅமைப்பின்படி, அரசியல்வாதிஒருவரே பாடசாலைவைபவங்களுக்கு எப்போதும் அழைக்கப்படுகின்றார்; இதிலிருந்து பாடசாலைகளிலே அரசியல் படிப்படியாகச் சுவறிக்கொள்ளுகிறது; அதனல் அரசியல் சிந்தையில்லாதவர்களின் ஆதரவையும், அபிமானத்தையும்தேடுவது அதிகம்நல்லதாகும்; பாடசாலைகளிலே சமயத்தைப்படிப்பிக்கும் பணியை அரசாங்கம் எடுத்துள்ளது; இது ஒரு பெரும் கேலிக்கூத்தாகும்; இதன் விளைவுயாதெனில், கோவிலிலிருந்து மக்களைத் தூரஅன்றுபிரியச்செய்து, புத்தகுருமாருக்கும், புத்தசமயிகளுக்குமிடையேயுள்ள இடைவெளியை மேலும் விசாலமாக்கி விட்டிருப்பதே; புத்தகுருமாரது வழிநடத்துகையின்கீழ் கோவிலே சமயகல்விக்கு அதிகம்சிறந்த இடமாகும்” என்று களுத்துறையிலே அன்று நிகழ்ந்த ஒரு பாடசாலைப்பரிசளிப்புவிழாவில் இலங்கைத் தேசியலிகிதர்கள் ஐக்கியசங்கத் தலைவர் திரு. டபிள்யு. கே. விஜெமன்னே உரைநிகழ்த்தியபோது கூறியிருக்கின்றார்.

## செத்தல்மிளகாய்க்குத் தடை

வர்த்தக-உணவுமந்திரி சென்றசனிக்கிழமை விடுத்துள்ள ஒருவிசேட ‘கெசற்’ அறிக்கைமூலம், உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட செத்தல்மிளகாயை உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து அல்லது சம்பந்தப்பட்ட பரிபாலன மாவட்டத்தின் பதில்உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியிடமிருந்து உத்தரவுபெறுமல் இலங்கையின் எந்தப் பகுதியிலிருந்தாவது யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுசெல்லவோ அன்றேல் எடுத்துச்செல்லவோ கூடாதெனத் தடைவிதித்திருக்கின்றார்.

## நெடுந்தீவுப் படகுச்சேவை

நெடுந்தீவு மோட்டர்லோஞ்சுப் படகுச்சேவையை அத்தீவைச்சேர்ந்த மக்களைக்கொண்ட ஒருகூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. நயினதீவு, அனலைதீவுப்பகுதிப்படகுப் போக்குவரத்துச்சேவையும் இவ்விருதீவுகளையும்சேர்ந்த மக்களைக்கொண்ட ஒரு கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்கப்படவிருக்கிறது. வைகாசிமாதம் 1-ந் திகதியிலிருந்து அவைகள் பொறுப்பேற்குமெனத் தெரியவருகிறது.

## சிகறெற்புகைப்பதை விலக்கும் முயற்சி

“சிகறெற்மீது விதிக்கப்பட்டுள்ள வரியை மேலும்உயர்த்தியும், சினிமாப் படமாளிகைகளிலும், பொதுசனப் போக்குவரத்து வாகனங்களிலும், மற்றும் பொதுமக்களின் உபயோகத்துக்காகவுள்ள இடங்களிலும் சிகறெற் புகைப்பதன்மீது தடைவிதித்தும் இந்நாட்டுமக்களின் சுகாதாரத்தை பாதுகாப்பதற்காகப் புகைப்பதற்கெதிரான தேசியஇயக்கம்ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டும்” என்ற பிரேரணையொன்று சென்றதிங்கட்கிழமை கண்டிமாநகரசபையின் மாதாந்தகூட்டத்திலே எடுத்தாளப்பட்டிருக்கிறது.

## இலவசக் கல்விமுறை

றுவான்வெல்லையைச்சேர்ந்த வெரகலை அரசாங்கபாடசாலைப் பெற்றோர்—ஆசிரியர்சங்ககூட்டம் அன்றுநிகழ்ந்தபோது, அதிலே எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா பேசியவிடத்து: “இலவசக்கல்விமுறை அபாயகரமும், சிக்கலுமான ஒருநிலைமையில் இருப்பதாலே எமக்குஇன்று அதன்வாலெங்கே, தலையெங்கே என்பது தெரியவில்லை; பெயரளவிலே மகாவித்தியாலயங்களாக ஆக்கப்பட்டுள்ள பாடசாலைகள் மாட்டுத்தொழுவங்கள்போல் காட்சியளிக்கின்றன; இருபத்தாறு வருடகாலம் நான் அரசியலிலும், பொதுலவாழ்விலும் ஈடுபட்டிருக்கிறேன்; இன்றிருக்கும்நிலையோ அடிமையுகத்திலும் இல்லாததாகும்” எனக் கூறலாயினர்.

## குடியேறிய 670குடும்பங்கள்

அக்கரைப்பற்றுப்பிரிவுக் காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக்அவர்கள் எடுத்துக்கொண்ட அருமுயற்சியின் பயனகக் குடியிருக்கக் காணியில்லாது கஷ்டப்பட்டிருந்த 670குடும்பங்களுக்கு கிராமவிஸ்தரிப்புத் திட்டம் ஒன்றின்கீழ் தனித்தனியே கால்ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் வீடுகட்டிக்கொள்வதற்கும் அரசாங்கம் உதவியளிக்கவிருக்கிறது. இந்தக் கிராமவிஸ்தரிப்புத் திட்டத்திற்கென அங்கே திருக்கோவில் பகுதியைச் சேர்ந்த கோரக்குறுப்புளனும் 335 ஏக்கர் தென்னந்தோட்டம் சுவீகரிக்கப்படலாயிற்று.

## பிரதமருக்கு வேண்டுகோள்

எதிரேவரும் அநுராதபுர உபதேர்தலிலே பிரதமர்சிறீமா போட்டியிட வேண்டுமென்று அங்குள்ள ஐக்கிய தேசியக்கட்சி வாலிபர்கிளைச்சங்கம் அவருக்கு ஒருவேண்டுகோள் விடுத்திருக்கிறது. தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்ட ஒருபாராளுமன்றத்திலே பிரதமர் தெரிவுசெய்யப்பட்ட ஒருபிரதிநிதியாய் இல்லையென்ற நிலைமையைப்போக்க அவர் இத்தேர்தலில் போட்டியிட இது ஒருநல்லசந்தர்ப்பமென்றும், அவர் தெரிவுசெய்யப்பட்ட ஒருபிரதிநிதியாகப் பாராளுமன்றத்திலிருப்பது நாட்டுக்குப் பெருமைதரக்கூடியதாகுமென்றும் அவ்வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

## வியாபாரிகளுக்கு எச்சரிக்கை

நிகழும்1962-ம்ஆண்டு தைமாதம் முதல் பங்குனிமாதம்வரை நடைபெற்ற சராசரிவிற்பனையின் அடிப்படையிலே மொத்தவியாபாரிகளும், சில்லறைவியாபாரிகளும் மூன்றுகிழமைகளுக்குத் தேவைப்படும் இருப்புக்குமேல் சிலஉணவுப்பொருட்களை வைத்திருக்கப்படாதென்று உணவு-வர்த்தக மந்திரி உத்தரவு பிறப்பித்திருக்கின்றார். அத்தியாவசிய உணவுப்பொருட்களை வியாபாரிகள் சேகரித்துப் பதுக்கி வைப்பதைத் தடுப்பதும், சமமாக அவைகள் வழங்கப்பட வழிவகுப்பதுமே இந்தஉத்தரவின் நோக்கமாகும். அரிசி, சீனி, மா, உப்பு, மாசி, கருவாடு முதலிய உணவுப்பொருட்களில்தான் இந்தஉத்தரவு நடைமுறையில் இருந்துவரும்.

## நாயால்நேர்ந்தகொலை

ருகமத்தைச்சேர்ந்த பொளக்தா எனும் கிராமத்திலே சென்றதிங்கட்கிழமை ஒருநாயையிட்டு உண்டான தகராறில் லெவெனிஸ் மெண்டிஸை அவன்தம்பியான யூனஸ்மெண்டிஸ் என்பவன் தெருவிலேவைத்து ஒருகத்தியால் குத்திவிடவே அவன் கீழே விழுந்து இறந்துபோயினன். அவன் இறந்தபின்னும் யூஜினிஸ்மெண்டிஸ் தனதுகோபம்ஆறுதவனய், அவனது உடலின்மேல் உட்கார்ந்து முதுகில் குத்தப்பட்ட கத்தியை மேலும்உள்ளே செலுத்திக்கொண்டிருந்தபோது மூவரால் இழுத்துக்கொண்டு போகப்பட்டான். தமையனின் மருமகனன செபேட்சில்வா தனதுநாயைக் களவாடியதாக யூஜினிஸ்மெண்டிஸ்கொண்ட சந்தேகத்திலிருந்து உண்டானபிணக்கே இந்தக்கொலைக்குக் காரணமாகும்.

## பொலிடோலும் தேங்காயும்

மூதுரைச்சேர்ந்த மல்லிகைத்தீவு எனும் கிராமத்தில் வசிப்பவரான திரு. கே. கதிரவேல்பிள்ளை என்பவர் பொலிடோலிலுள்ள நஞ்சைத் தேங்காய்ச்சத்து முறித்துவிடக்கூடியதென்று தனதுபரிசோதனையிலே கண்டறிந்து வெளியிட்டிருக்கின்றார். அவர் சாதத்துடன் பொலிடோலைக்கலந்து நாய் ஒன்றுக்கு வைத்தபோது அந்தச் சாதத்தை அதுதின்றுவிட்டு இறக்குந்தருவாயில் இருந்தது. உடனே அவர் ஒருகிளாஸ் தேங்காய்ப்பாலை எடுத்து நாயைக்குடிக்கவைத்தபோது, அதனுடையவாயின் இருபக்கங்களிலுமிருந்து ஒருவகைவீணிவடிய, அது குணமடைவதாய்க் காணப்பட்டது, உடனே அவர் மீண்டும் ஒருகிளாஸ் தேங்காய்ப்பாலைக் குடிக்கச்செய்யவே, [illegible] உயிர்பிழைத்தது.

## பதிவுசெய்துள்ள பட்டதாரிகள்

ஆசிரியர்களாக நியமனஞ்செய்யப்படுமாறு பட்டதாரிகளும், பட்டதாரிப்பரீட்சை எடுத்துள்ளவர்களுமான 500பேர் கல்விப்பகுதியிலே தங்கள் பெயர்களைப்பதிவுசெய்திருக்கிறார்கள். பணமில்லாமையால் புதியநியமனங்கள் செய்யக் கல்விப்பகுதியால் முடியாமலிருக்கிறது. புதியஆசிரியர்களை நியமனஞ்செய்யப் பணம்கோரிக் கல்விமந்திரி உபமான்யப் பிரேரணை ஒன்றைச் சனப்பிரதிநிதிகள்சபையில் சமர்ப்பிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆசிரிய காலிஸ்தானங்கள்

வித்தியாதிபரின் நிர்வாகத்திலுள்ள பாடசாலைகளிலே ஆசிரியர்களுக்கான 10,600காலிஸ்தானங்கள் இருந்துவருகின்றன. ஆனல், இந்தஸ்தானங்களை நிரப்புவதற்குக் கல்விப்பகுதியிடம் பணமில்லை. ஆசிரியர்களின் சம்பளங்களைக்கொடுக்கப் போதியபணமிருந்தால் ஆசிரியபதவிகளுக்கு மனுப்பண்ணிவிட்டுக் காத்துக்கொண்டிருப்பவர்களின் அட்டவணையிலிருந்து காலியாயுள்ளஇடங்களை நிரப்புதற்குப் போதியஆசிரியர்களைத் தெரிந்துநியமிக்கக் கூடியதாகுமாம்.

## டக்றர் பிறேமா செபஸ்ரியன்

இந்தியாவிலே அக்றாநகரிலுள்ள சாரோஜினிநாயுடு வைத்தியகல்லூரியில் வைத்தியசாஸ்திரம் கற்றுவந்த செல்வி பிறேமா செபஸ்ரியன் அக்றாநகர் சர்வகலாசாலையின் எம்பி. பிஎஸ். பரீட்சையில் அரங்கேறியிருக்கிறாரெனச் செய்திகிடைத்துள்ளது. இவர் மன்னர், சென்சேவியர்கல்லூரி, திருச்சினப்பளி, திருச்சிலுவைக் கல்லூரி, சென்னை, ஸ்ரெல்லாமாறிஸ் கல்லூரி ஆதியவற்றின் பழையமாணவி. மன்னர்வாசிகளான சி. எஸ். செபஸ்ரியன்தம்பதிகளின் புதல்வி. இவர் சமீபத்திலே இலங்கைக்குத் திரும்பஇருக்கின்றார்.

## ஆசிரியரும் அரசியல் உரிமையும்

கிராமச்சங்கம், பட்டினசபை, நகரசபை, மாநகரசபையாகிய தலதாபன ஸ்தாபனங்களில் அங்கத்தவர்களாய்ச் சுமார்800ஆசிரியர்கள் இருந்துவருகிறார்கள். அரசாங்கபாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு அரசியல்உரிமைகளை நீக்கிவிடுவதென்று அரசாங்கம் செய்துள்ள ஒருதீர்மானத்தின்பேரில் அவர்கள் பின்னரும்தொடர்ந்து ஆசிரியர்களாயிருக்க விரும்பினல் தலதாபன ஸ்தாபனங்களில் தாங்கள்வகித்திருக்கும் பதவிகளை இராசினாமாச் செய்துவிடவேண்டுமென்று அனைவருக்கும் வித்தியாதிபர் ஒரு அறிவித்தல் அனுப்பிவைத்திருக்கின்றார்.

## கல்விக் கமிஷனனின் அறிக்கை

“தேசியகல்விக்கமிஷன் சிறந்த பேறிஞர்களையும், கல்விநிபுணர்களையும்கொண்ட ஒருகமிஷனென்று நம்பப்பட்டபோதிலும் அதுவெளியிட்டுள்ள இடைக்கால அறிக்கை வகுப்புத்துவேஷமும், பாரபட்சமுமானது; ஆகவே, அக்கமிஷனைக் கலைத்துவிடுவதோடு, அந்தஅறிக்கையையும் நெருப்பில்போட்டுச் சாம்பலாக்கவேண்டும்” என்று கண்டியைச் சேர்ந்த கலஹாவில் சென்ற 9-ந்திகதியன்று நடைபெற்ற ஒருபெருங்கூட்டத்தில் பேசியபோது இ. தொ. காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற நியமன அங்கத்தவருமான திரு. எஸ். தொண்டமான் அவர்கள் கூறியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உல்லாசவேளை

அத்தானின் அஞ்சல்

# ஒலிவேத்து மலையில்

நமது உல்லாசவேளைக் குடும்பத்தினரின் இளைய மருகர் இயூஜின் தமது மேல்நாட்டுப் பயிற்சியை முடித்துக்கொண்டு தாய்நாடு திரும்பும் வழியில் ஜெருசலேமின் புனித தலங்களைத் தரிசித்துவருகின்ருர். ஒலிவேத்துமலைபற்றிய அவரின் அஞ்சலை இதன்கீழ் பிரசுரிக்கின்ருேம்.

சுவையான கத்தோலிக்க செய்திகட்கு உல்லாசவேளையைத் தவருது படியுங்கள்.

— அமலன்

மனுக்குலத்தின் இரட்சணியத்துக்காக மன்னுயிரெடுத்த சுதனுகிய சர்வேசுரன் இவ்வுலகில் வசித்தபோது மலைகளையும், குன்றுகளையும் அதிகமாக விரும்பினுர் என்பது அவரது வாழ்க்கைவரலாற்றிலிருந்து காணக்கூடியதாகவுள்ளது. தமது பிதாவை நோக்கிச் செபிப்பதற்காக மலைகளின் மேல் ஏறினுர். அங்கிருந்து தம்மால் இரட்சிக்கப்படவிருக்கும் பூவுலகத்தை உற்று நோக்குவார். மலையொன்றின் மீது அவர்நிகழ்த்திய சொற்பொழிவு உலகப்பிரசித்தி யடைந்துளது. இன்னெருமலையின்மீது அவர் தம்மையே எமக்காகப் பலியாக்கினுர். மறுரூபமானதும் ஒருமலையில். பரலோகத்துக்கு ஆரோகணமானதும் மற்ருெருமலையிலிருந்தே.

ஜெருசலேம்நகருக்குக் கிழக்கிலிருந்து செல்பவர்கள் ஜெரிக்கோவிலிருந்து செல்லும் பாதையின்பக்கமாக முதலில் தரிசிப்பது ஒலிவேத்துமலையை. இப்பர்வதம் கிறிஸ்துவின் இரட்சணிய அலுவலில் முக்கியபங்கைக் கொண்டுவிளங்கிற்று. 3,000 அடிகள்வரை உயர்ந்தது இம்மலை. கேதுரான்என்ற சிறு கணவாய் ஜெருசலேமநகரை இம்மலையிலிருந்து பிரிக்கின்றது. 3,000 ஆண்டுகட்குமுன்னர் தாவீது பகைவர்களிடமிருந்து தப்பியோடியபோது இம்மலையையே சரணடைந்தார். அன்றும், கிறிஸ்துவின் காலத்திலும் அடர்த்தியாக உயர்ந்து வளர்ந்த ஒலிவமரங்களால் நிறைந்திருந்தது ஒலிவேத்மலை. உலகஇரட்சகர் பரலோகத்துக்கு ஆரோகணமான 40வருடங்களின்பின்னுல் அவரின் தீர்க்கதரிசனம் உரோமரின் படையெடுப்பினுல் நிறைவேற்றப்பட்டது. அவ்வமயம் ரீற்றுஸ் சக்கிரவர்த்தியின் எட்டாவது படையணியினர் யுத்ததேவைகட்காக ஒலிவேத்துமலைகளின் காடுகளையும், உயர் மரங்களில் பலவற்றையும் வெட்டி அழித்தனர். எனவே, ஜோர்தான்நதியைத் தனது அடிவாரத்தில் கொண்டிருக்கும் இம்மலை இன்று சிலமரங்களுடன் வெறும்சிகரமாகவே காட்சி தருகின்றது.

மலையடியிலமைந்துள்ள நகரம் பல படையெடுப்புகளின் சிதைவுக்காளாயிருப்பது தெளிவாகக் காணக்கூடியது. எனினும், மலையினுச்சிக்குச்செல்லும் சிறிய ஒற்றையடிப்பாதை அழிவின்றி உபயோகப்படுத்தப்படுகின்றது. இப்பாதைவழியேசெல்லும் யாத்திரிகர்கள் ஒருகால் கிறிஸ்துவின் புனிதபாதங்கள் பதிந்த தலம்இதுஎன்பதை மனதிலெண்ணிக்கொண்டு பயபக்தியுடன் செல்வது இங்கு குறிப்பிடுதற்குரியது.

மலைக்கு ஏறிச்செல்லும் பாதையின் பக்கலில் சுமார் ஆயிரம்அடிகள் உயரத்தில் முதலில் காட்சியளிப்பது பிரான்சிஸ்கன் சபையினரின் சிற்ருலயம். இங்கு நின்றவண்ணம் மனுமகன் சிறிது தொலைவிலுள்ள ஜெருசலேம்நகரை உற்றுநோக்கினுர். அந்நகரின் எதிர்காலத்தையெண்ணிக் கண்ணீர்சிந்தினுர். இந்நிகழ்ச்சியை நினைவுறுத்துகிறது இச்சிற்ருலயம். சற்று மேல் நோக்கிச்சென்ருல் கார்மேல்சபையினரின் "பாத்தர் நோஸ்தர்" ஆலயத்தைக் காணலாம். இவ்வாலயம் குறிப்பிடும் நிகழ்ச்சியும் மிகமுக்கியமானது. பரமபிதாவைநோக்கித் தாங்கள்வேண்டிக்கொள்ளும் விதத்தைச் சொல்லித் தருமாறு சீடர்கள் கேட்டுக்கொண்டனர். உலகஇரட்சகரும் வானத்தை ஏறெடுத்து நோக்கியவண்ணம் "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" என்றுதொடங்கும் செபத்தைச் சொல்லிக்கொடுத்தார். இவ்வாலயத்தின் உட்சுவர்களில் உலகின்பிரதான 36மொழிகளில் பரமண்டலமந்திரம் பொறிக்கப்பட்டுளது.

அவர்கள் வானத்தை அண்ணுர்ந்து பார்த்தபோது அவர் மேலே உயர்த்தப்படுவதையும், ஒரு வெண்ணிறமுகில் அவர்களின் பார்வையிலிருந்து அவரை மறைத்ததையும் கண்டனர்என வேதநூல் கிறிஸ்துவின் ஆரோகணம்பற்றிக் கூறுகின்றது. இவ்வரலாற்றை நினைவுறுத்துமிடத்தில் இன்று முஸ்லீம்களின் பள்ளிவாசலொன்று காணப்படுகின்றது. புனிதை கெலனுவினுல் நிறுவப்பட்ட பழைய ஆலயத்தின் பக்கமாக 1835-ல் இப்பள்ளிவாசல் அமைக்கப்பட்டது. பரலோகத்துக்கு ஆரோகணமாண திருநாளில் பிரான்சிஸ்கன் துறவிகள் இவ்விடத்தில் தற்காலிகபீடமொன்றைநிறுவித் தோத்திரப்பலி பூசை நிறைவேற்றுகின்றனர். இம்மலையின் புனிததலங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு பிரான்சிஸ்கன்சபையாரிடம் ஒப்புவிக்கப்பட்டுளது.

"அவர்கள் ஜெத்ஸமெனிஎன்றழைக்கப்படும் இடத்துக்குவந்தபோது இங்கு காத்திருங்கள், நான்போய் செபம்செய்வேன்என அவர்கூறினுர். பின்னர் இராயப்பரையும், இயாகப்பரையும், அருளப்பரையும் அழைத்துக்கொண்டு ......... பின்னும் யூதாஸ்கரியோத்து முன்பாகவந்து அவரைவாழ்த்திக் கன்னத்தில் முத்தமிட்டான்." இவைநடைபெற்றதோட்டம் ஒலிவேத்மலையின் அடிவாரத்தில் அமைந்துளது.

இன்று இத்தோட்டத்தில் வெண்பசுமை வர்ணம்நிறைந்த எட்டுமரங்களே காணக்கிடக்கின்றன. ஒலிவமரங்கள் மிகநீண்டகாலத்துக்கு வாழக்கூடியவை. மரத்தின் சிலமேற்பகுதிகள் இறப்பினும் அடிவாரத்திலிருந்து புதிய கொப்புகள் முளைவிட்டுவளரும். எனவே படையெடுப்புகளால் அழிக்கப்பட்டவைதவிர எஞ்சியிருக்கும் இம்மரங்கள் கிறிஸ்துகாலத்தியவை என எண்ணப்படுகின்றன. இத்தோட்டமெங்கணும் ஐந்துதிருக்காயப்பூக்களும் செந்நிற ரோசாமலர்களும் பிரான்சிஸ்கன் துறவிகளால் வெகுதவனமாக வளர்க்கப்பட்டுவருகின்றன.

எங்களாண்டவராகிய யேசுக்கிறிஸ்து இம்மலையை அதிகமாக விரும்பினுர். இது அவரது நண்பர்களுள் ஒருவருக்குச் சொந்தமானதென அறியக்கிடக்கின்றது. அப்போஸ்தலர்கள் தங்கள் கடமையை மறந்து அயர்ந்து நித்திரைசெய்த தலத்தை ஒருவெண்ணிற நடுகல் சுட்டிக்காட்டுகின்றது. யூதாஸ் முத்தமிட்டுத் தன் குருவைக் காட்டிக்கொடுத்த இடமும் தனிக் குறிப்புடன் மிளிர்கின்றது. கிறிஸ்து இரத்தவியர்வைசிந்திய கற்பாறையின் பக்கமாக மகாலயமொன்று கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. நாலாவது நூற்ருண்டில் அமைக்கப்பட்ட ஆலயத்தின் அத்திவாரத்தில் 1924-ல் மீண்டும் நவீனமுறையில் மகாலயமொன்றை எழுப்பியுள்ளனர். மரணவஸ்தையின் மகாலயம், சர்வஜாதியினரின் ஆலயம் என்றெல்லாம் இக்கோவில் அழைக்கப்படுகின்றது.

மனுக்குலத்தோர் கட்டிக்கொள்ளும் அக்கிரமங்களின் கனகனத்தையெண்ணி அவற்றிற்குப் பரிகாரமாகத் தாம் மேற்கொள்ளவிருந்த பாடுகளைப் பற்றிச் சிந்தித்து யேசுநாதர் மரணவஸ்தையுற்ற இத்தலத்தில் யாத்திரிகர்கள் முழந்தாளிட்டு வேண்டிக்கொண்டபின், கிறிஸ்துவின் செங்குருதியால் புனிதமான கற்பாறையைப் பக்தியுடன் முத்தமிடும் காட்சி மனதையுருக்க வல்லது. இவ்விதம் ஒலிவேத்துமலை இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன்னுல் கிறிஸ்து நடாத்திய இரட்சணிய அலுவல்களின் முக்கிய நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் புனிததலமாக இன்று காட்சியளிக்கின்றது.

## 2-வது வத்திக்கான் ...

[ 1-ம் பக்கத் தொடர்ச்சி ]

தமான குழு. 2. இல்லறத் திருத்தொண்டு சம்பந்தமான குழு. 3. சடங்குகள் சம்பந்தமான குழு. 4. பிரசுரங்கள், பொதுப் பொழுதுபோக்குச் சாதனங்கள் (சினிமா, றேடியோ, தொலைதரிசனி) சம்பந்தப்பட்ட காரியாலயம். 5, கிறிஸ்தவர்களின் ஐக்கியம் சம்பந்தமான காரியாலயம். அடுத்துவரும் ஆனிமாதத்திற்கு முன் எல்லாத்திட்டங்களும் பொதுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுப் பொதுச்சங்கத்தில் விவாதிக்கப்படவேண்டிய திட்டங்கள் எவையென்று தீர்மானிக்கப்படும்.

**ஞானமுள்ள புதல்வன் தன் பிதாவைச் சந்தோஷப்படுத்துகிருன்;**
**மதிகெட்ட மகன் தன் மாதாவுக்கு கஸ்தியை வருவிக்கிருன்.**

தொழிலாளரின் பாதுகாவலராம்

### அர்ச். சூசையப்பர் பேரில்

## பரிசுத்தபிதா இயற்றிய செபம்

மகிமை நிறைந்த பிதாப்பிதாவாகிய அர்ச். சூசையப்பரே! நசரேத்தின் தாழ்மையும், நேர்மையுமுள்ள தொழிலாளரே! ஊக்கமுள்ள முயற்சியாலும், யேசுவுடனும், மரியாயுடனும் கொண்ட ஆச்சரியமான ஐக்கியத்தாலும் பூரணமாக்கப்பட்ட வாழ்க்கையின் மாதிரிகையைச் சகல கிறீஸ்தவர்களுக்கும் — சிறப்பாக எமக்கும் தந்தருளியவரே! எமது அனுதின உழைப்பில் உதவியளித்துக் கத்தோலிக்க தொழிலாளராகியநாமும் தேவனைத் தோத்திரிப்பதும், எம்மை அர்ச்சிப்பதும், நாம் வாழும் சமூகத்துக்குப் பயன்படுவதுமாகிய எமது முயற்சிகளின் உச்சித லட்சியங்களை நாம் அடையச் செய்தருளும்.

எமது அதிபட்சம் நிறைந்த பாதுகாவலரே! தாழ்மை நிறைந்ததும், களங்கமற்றதுமான இருதயத்தையும், எங்கள் தொழிலில் பற்றுதலையும், உடன் தொழிலாளர்மட்டில் நேச பான்மையையும், பூலோக வாழ்க்கையின் தவிர்க்க முடியாத துன்பங்களில் தேவ சித்தத்துக்குப் பணிவையும், அவைகளைச்சகிப்பதில் சந்தோஷத்தையும், சமூகத்திற்கு நாம் செய்யவேண்டிய சிறப்பான தொண்டைப் பற்றிய உணர்வையும், எமது கடமைப்பாட்டின் பொறுப்பையும், கட்டுப்பாட்டுக்கு அமைந்த போக்கையும், செபப் போக்கையும், எசமான்கள்மட்டில் அமைச்சல் மரியாதையையும், உடன் தொழிலாளர் மட்டில் சகோதர பான்மையையும், எம்மைச் சார்ந்தோர் மட்டில் அன்பையும், தயைதாட்சணியத்தையும் எமக்கு ஆண்டவரிடத்திலிருந்து பெற்றுத்தந்தருளும்.

எமது தொழிலின் பலனை நேர்மையாய் அனுபவிக்கும்படியாக யாவும் அனுகூலமாயிருக்கும் சுபீட்ச காலத்தில் எம்முடன் இருந்தருளும். வானமே இடிந்து எம்மை அமுக்குவது போலவும், நாம் கையாளும் தொழிற் கருவிகளுங்கூட எம்மை எதிர்ப்பது போலவும் துன்பம் வந்துற்ற காலத்திலே எமக்கு ஆதரவாயிரும்.

உம்முடைய எளிய பட்டறையின் ஓர் மூலையில் அமைதியாய் அமர்ந்து நூல்நூற்றுப் புன்னகை ததும்பிய முகத்தினளாயிருந்த மிகவும் இனிய உமது பத்தினியும், எங்கள் திருத்தாயாருமான மரியன்னையை உமது மாதிரிகைப்படி நாம் என்றும் கண்டுபாவிக்க அருள்புரிந்தருளும். உம்மோடுகூடத் தச்சப்பட்டறையில் உழைத்த யேசுவிடமிருந்து எமது பார்வை அகலாதிருக்கச் செய்தருளும். இவ்விதமாய்ச் சதாகாலமும் எம்மை மோட்சத்தில் காத்திருக்கும் நித்திய பேரானந்த வாழ்வுக்கு அச்சாரமாகப் பூலோகத்தில் நாம் சாந்தியும், பரிசுத்தமுமான வாழ்க்கை நடத்திவரச் செய்தருளும்,

ஆமென்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Sunday April 29-1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org